பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**27 12 2025** **7 15**

சனிக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கர்நாடக மாநிலம் **Kadamba** கடற்படைத் தளத்தை நாளை பார்வையிடுகிறார்.

2. சீக்கிய குரு கோபிந்த் சிங்கின் பிறந்த நாள் இன்று **Parkash** விழாவாக கொண்டாடப்பட்டது.

3. பங்களாதேஷ் பொதுத்தேர்தலில் ஜமாத்-ஏ-இஸ்லாமி கட்சியுடன், தேசிய மக்கள் கட்சி, கூட்டணி அமைப்பதற்கு அக்கட்சியின் மகளிர் உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

4. யுக்ரைன் தலைநகர் கீவில் ரஷ்யா இன்று கடும் தாக்குதல் நடத்தியுள்ளது.

5. தேசிய துப்பாக்கி சுடுதல் போட்டியின் மகளிர் **50** மீட்டர் ரைஃபிள் பிரிவில் திலோத்தமா சென் தங்கப்பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கர்நாடக மாநிலம் **Kadamba** கடற்படைத் தளத்தை நாளை பார்வையிடுகிறார்.

கோவாவில் இருந்த **Karwar** செல்லும் அவரை கர்நாடக அளுநர் திரு. தாவர்சந்த் கெலாட் உள்ளிட்டோர் வரவேற்க உள்ளனர்.

**Karwar** துறைமுகத்தில் இருந்து இந்திய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பலில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு பயணம் செய்ய உள்ளார்.

விசாகப்பட்டினத்தில் கடந்த **2006**ஆம் ஆண்டு நீர்மூழ்கிக் கப்பலில் பயணம் செய்த மறைந்த முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் அப்துல் கலாமிற்குப் பிறகு, நீர்மூழ்கிக் கப்பலில் பயணிக்கும் இரண்டாவது குடியரசுத்தலைவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

குடியரசுத்லைவரின் வருகையை ஒட்டி **Karwar** கடலோரப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**Karwar**-ல் இருந்து **Majali** வரையிலான கடற்பகுதியில் மீனவர்கள் மீன்பிடிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

சீக்கிய குரு கோபிந்த் சிங்கின் பிறந்த நாள் இன்று **Parkash** விழாவாக கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி குடியரசுத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ஸ்ரீகுரு கோபிந்த் சிங் எதிரிகளை தீரமாக எதிர்கொண்டதாகவும், நீதியையும், சுயமரியாதை கொள்கையையும் காக்க மக்களை ஒருங்கிணைத்ததாக கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், சீக்கியர்களின் 10வது குருவான கோபிந்த் சிங், தமது வாழ்க்கையை போதனைகள் மூலம் மக்களுக்கு எடுத்துரைத்ததாக கூறினார்.

அவரது தன்னலமற்ற சேவை இப்போதும் ஊக்கமளிப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

<<<<>>>>

மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் புனேயில் நாளை மறுநாள் நடைபெறும் மத்திய அரசு மற்றும் வங்கி ஊழியர்களுக்கான ஓய்வுக்குப் பிந்தைய ஆலோசனை குறித்த கருத்தரங்கை தொடங்கி வைக்கிறார்.

ஓய்வு பெறும் ஊழியர்களின் நலனுக்காக இந்த கருத்தரங்கை நடத்த உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்தக் கருத்தரங்கில் ஓய்வு பெற உள்ள ஊழியர்களுக்கான பல்வேறு தகவல்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்படும்.

ஓய்வூதியம், **Bhavishya** இணையதளம், ஒருங்கிணைந்த ஓய்வூதியதாரர்களுக்கான இணைதளம், டிஜிட்டல் வாழ்நாள் சான்றிதழ் உள்ளிட்டவை குறித்த விழிப்புணர்வு இந்த கருத்தரங்கில் இடம்பெறும்.

<<<<>>>>

மாநிலங்களின் தலைமைச் செயலர்கள் பங்கேற்றுள்ள தேசிய மாநாட்டின் மூன்றாம் நாள் அமர்வு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் புதுதில்லியில் நாளை நடைபெறுகிறது.

நேற்று தொடங்கிய இந்த மூன்று நாள் மாநாட்டில் மத்திய - மாநில அரசுகள் இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள வானொலி நிலையங்கள் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<>>>>

நாட்டுக்கு எதிராக செயல்படும் பல்வேறு அமைப்புகளுடன் காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி தொடர்பில் இருப்பதாக பிஜேபி குறை கூறியுள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி செய்தித்தொடர்பாளர் திரு. சுதான்ஷு திரிவேதி, நாட்டின் ஜனநாயகத்திற்கு எதிராக திரு. ராகுல் காந்தி பேசி வருவதாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலை உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கத்தில் கிராமப்புற மக்களுக்கு ஆண்டுக்கு 125 நாள்

வேலைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டு இருப்பதற்கு பல்வேறு தரப்பினரும் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்த திட்டத்தின்கீழ் வேலை நாட்களை அதிகரித்து இருப்பது தங்களுக்கு உதவியாக இருக்கும் என்று பயனாளிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயனாளிகள் - 55 செகண்ட்ஸ்)

<<<<>>>>

கர்நாடகா மைசூர் அரண்மனை வளாகம் அருகே ஹிலியம் சிலிண்டர் வெடித்து விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 3 ஆக அதிகரித்துள்ளது.

இதுகுறித்து விசாரணை நடைபெற்று வருவதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<>>>>

பங்களாதேஷில் அடுத்த ஆண்டு பிப்ரவரி 12ஆம் தேதி நடைபெ உள்ள தேர்தலில் பங்களாதேஷ் ஜமாத்தே இஸ்லாமி கட்சியுடன் தேசிய மக்கள் கட்சி கூட்டணி அமைப்பதற்கு அக்கட்சியின் மகளிர் உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இது தொடர்பான செய்திகள் வெளிவந்த தையடுத்து, தேசிய மக்கள் கட்சியைச் சேர்ந்த மகளிர் உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது ஜனநாயக கொள்கைக்கு எதிரானது என்றும், பங்களாதேஷின் 1971ஆம் ஆண்டு நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தில் எழுப்பிய கொள்கைகளுக்கு எதிரானது என்னும் இவர்கள் கூறியுள்ளனர்.

இதனிடையே அரசியலில் மதத்தை இணைக்கவில்லை என்று பங்களாதேஷ் ஜமாத்தே இஸ்லாமி கட்சி தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பாகிஸ்தான் நாட்டின் பலுசிஸ்தான் மாகாணத்தில் பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 17 தீவிரவாதிகள் உயிரிழந்தனர்.

கடந்த 24ஆம் தேதி முதல் 26ஆம் தேதி வரை 3 நாட்களில் பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் நடத்திய தேடுதல் வேட்டையில் இவர்கள் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் ராணுவம் கூறியுள்ளது.

இதனிடையே பலுசிஸ்தானில் 6 பாகிஸ்தான் ராணுவத்தினர் கொல்லப்பட்டதற்கு பலுசிஸ்தான் விடுதலை அமைப்பினர் பொறுப்பேற்றுள்ளனர்.

இதுதொடர்பாக அந்த அமைப்பின் செய்தித்தொடர்பாளர் மேஜர் **Baloch** விடுத்துள்ள அறிக்கையில், **Surab Bazar** மற்றும் **Basol** ராணுவ முகாமிலும் பாதுகாப்புப் படையினர் மீதும் நடத்திய தாக்குதலில் ராணுவத்தினர் கொல்லப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் இருந்து சுதந்திரம் பெறுவதற்காக பலுசிஸ்தான் மக்கள் போராடி வருவது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

யுக்ரைன் தலைநகர் கீவில் ரஷ்யா இன்று கடும் தாக்குதல் நடத்தியுள்ளது.

இதில் ஒருவர் உயிரிழந்ததாகவும், **30**க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக யுக்ரைன் தெரிவித்துள்ளது,

யுக்ரைன் அதிபர் திரு. ஜெலன்ஸ்கி நாளை அமெரிக்காவின் ஃபுளோரிடாவில் அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்புடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ள நிலையில் ரஷ்யா இந்த தாக்குதல் நடத்தியுள்ளது.

யுக்ரைனின் எரிசக்தி கட்டமைப்பு மற்றும் ராணுவ தளவாடங்களை இலக்காகக் கொண்டு ஹைப்பர்சோனிக் ஏவுகணை மூலம் தாக்கியுள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

ரஷ்யாவில் பொதுமக்கள் மீது யுக்ரைன் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலையடுத்து, யுக்ரைன் தலைநகர் கீவில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதாக யுக்ரைன் அதிபர் திரு. ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

யுக்ரைன் தலைநகர் கீவில் ரஷ்யா இன்று கடும் தாக்குதல் நடத்தியுள்ளது.

இதில் ஒருவர் உயிரிழந்ததாகவும், 30க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக யுக்ரைன் தெரிவித்துள்ளது,

யுக்ரைன் அதிபர் திரு. ஜெலன்ஸ்கி நாளை அமெரிக்காவின் ஃபுளோரிடாவில் அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்புடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ள நிலையில் ரஷ்யா இந்த தாக்குதல் நடத்தியுள்ளது.

யுக்ரைனின் எரிசக்தி கட்டமைப்பு மற்றும் ராணுவ தளவாடங்களை இலக்காகக் கொண்டு ஹைப்பர்சோனிக் ஏவுகணை மூலம் தாக்கியுள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

ரஷ்யாவில் பொதுமக்கள் மீது யுக்ரைன் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலையடுத்து, யுக்ரைன் தலைநகர் கீவில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதாக யுக்ரைன் அதிபர் திரு. ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அமெரிக்காவில் நிலவும் கடும் பனிப்புயலால் பெரும்பாலான விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

நியூயார்க், **Boston, Chicago, Toronto** உள்ளிட்ட விமான நிலையங்களில் இருந்து ஆயிரத்து **600**க்கும் மேற்பட்ட விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன.

மேலும் **7** ஆயிரத்து **400** விமான சேவைகள் தாமதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூயார்க் மற்றும் **South Connecticut** உள்ளிட்ட நகரங்களில் கடும் பனிப்பொழிவு ஏற்படும் என்று அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனையடுத்து நியூயார்க்கில் பனிக்கால அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தேசிய துப்பாக்கி சுடுதல் போட்டியின் மகளிர் **50** மீட்டர் ரைஃபிள் பிரிவில் திலோத்தமா சென் தங்கப்பதக்கம் வென்றார்.

போபாலில் நடைபெற்ற இப்போட்டியில் கர்நாடகாவின் திலோத்தமாக முதலிடத்தையும், கேரளாவின் **Vidarsa** வெள்ளிப் பதக்கத்தையும், ரயில்வேயின் அயோனிகா வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

---------------

**Monastir** சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manas Dhamne** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **7-5, 6-4** என்ற செட்கணக்கில் பிரான்சின் **Moise Kouame**-ஐ வென்றார்.

---------------

சோலாப்பூரில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் - அங்கிதா ரெய்னா இணை பட்டம் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 4-6, 7-5, 10-6 என்ற செட் கணக்கில் இந்தியாவின் Zeel Desai - ரஷ்யாவின் Elina Nepliy இணையை வென்றது.

**<<<<The End>>>>**